மசேநி லை.்.ப் பற்றிய தகவல் புத்தகம்

# மசேநி லை.்.ப் எவ்வாறு செயல்படுகிறது

# இந்தச் சிறு புத்தகத்தை எவ்வாறு பயன்படுத்துவது

இந்தச் சிறு புத்தகத்தை நீங்கள் படிக்கத் தொடங்குவதற்கு முன்னர் இத்திட்டத்தைப் பற்றி மேலோட்டமாகத் தெரிந்துகொள்ள 'மசேநி லை.ஃ.ப்-க்கான ஒரு கையேடு' என்ற தகவல் புத்தகத்தைப் படியுங்கள். மசேநி எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பற்றி நீங்கள் விவரமாகப் புரிந்துகொள்ள இந்தச் சிறு புத்தகம் உங்களுக்கு உதவிடும். பின்வரும் தலைப்புகளுக்கு கீழ் முக்கியக் குறிப்புகள் பட்டியலிடப்பட்டுள்ளன. மேலும் அதிகத் தகவல்களை www.cpf.gov.sg யில் காணலாம்.


பக்கம்

1. அறிமுகம் 4

2. மசேநி லை.ஃ.ப் எவ்வாறு செயல்படுகிறது

2.1 மசேநி லை.ஃ.ப்-யில் சேரும் போது

- நான் இதில் சேரும் போது என்ன நடக்கும்? 5
- மசேநி லை.ஃ.ப்-க்காக பயன்படுத்தப்படும் என்னுடைய சேமிப்புகளுக்கு மசேநி வட்டி தொடர்ந்து வழங்கப்படுமா? 11
- சேர்ந்த பிறகு என்னுடைய திட்டத்தை என்னால் மாற்றிக்கொள்ள முடியுமா ? 11
- சேர்ந்த பிறகு என்னால் விலகிக்கொள்ள முடியுமா? 12
- என்னுடைய சொத்தை இப்போதும் என்னால் அடமானம் வைக்முடியுமா? 12

2.2 என்னுடைய குறைந்தபட்சத் தொகையை மீட்கத் தொடங்கும் வயதை (DDA)[1] நான் அடையும் போது

- என்னுடைய DDA க்கு 1-2 மாதங்களுக்கு முன்னர் என்ன நடக்கும்? 13
- என்னுடைய DDA விலிருந்து என்ன நடக்கும்? 13
- மாதாந்திர வழங்கீட்டுத் தொகை நிலையானதா? 14
- என்னுடைய DDA க்குப் பிறகு நான் என்னுடைய ஓய்வுக் கணக்கு (RA) யில் கூடுதல் தொகைகளை பெற்றால் என்ன நடக்கும்? 14

2.3 நான் இறந்துவிட்டால்

- இறப்பைத் தொடர்ந்து என்ன நடக்கும்? 15
- வாரிசுத் தொகை என்றால் என்ன? 15


[1] குறைந்தபட்சத் தொகையை மீட்கத் தொடங்கும் வயது (DDA) என்றால் என்ன என்று அறிந்துகொள்ள பின்னிணைப்பைப் பார்க்கவும்..

3. உங்களுக்கு ஏற்படக்கூடிய பிற கேள்விகள்

- அதிக வழங்கீடுகளை நான் எவ்வாறு பெற முடியும்? 17
- $20,000 க்கும் குறைவான தொகையுடன் நான் மசேநி லை.ஃப்-யில் சேர்கிறேன் என்றால், முழு எல்-போனஸை பெறுவதற்காக $20,000 வரையிலான கூடுதல் செலுத்து தொகைகளை என்னால் பிறகு செலுத்த முடியுமா? 17
- நான் பெறும் லை.ஃப்-போனஸ் (எல்-போனஸ்) தொகையில் எனக்கு ஒப்புதல் இல்லை என்றால் நான் என்ன செய்ய வேண்டும்? 18

பின்னிணைப்பு மசேநி லை.ஃப்-யில் பயன்படுத்தப்படும் சொற்களின் அர்த்தம்

# அறிமுகம்

வயதானவர்களுக்கான மசேநி வாழ்நாள் வருமானத் திட்டமானது (CPF LIFE) உங்களுடைய மீட்கத் தொடங்கும் வயது (DDA) தொடக்கத்திலிருந்து மாதாந்திர வழங்கீடு ஒன்றை நீங்கள் உயிர் வாழும் வரையில் அளித்திடும்.

சுமார் 20 வருடங்களுக்கு மட்டுமே நீடிக்கும் வழங்கீடுகளைக் கொண்ட தற்போதைய குறைந்தபட்சத் தொகை திட்டத்தை (MSS) இது மேம்படுத்துகிறது.

## மசேநி லை.ீ.ப் எவ்வாறு செயல்படுகிறது

மசேநி லை.ீ.ப் திட்டம் இரண்டு பாகங்களை உள்ளடக்கியது - உங்களுடைய ஓய்வுகால கணக்கு (RA) சேமிப்புகள் மற்றும் ஆண்டுத்தொகை. உங்களுடைய குறைந்தபட்சத் தொகையை மீட்கத் தொடங்கும் வயதிலிருந்து (DDA)[2] வழங்கீடுகள் தொடங்கும்.

## 2.1 மசேநி லை.ீ.ப்-யில் சேரும் போது

**கே: நான் சேரும் போது என்ன நடக்கும்?**

**ப:** நீங்கள் மசேநி லை.ீ.ப்-யில் சேரும் போது, உங்களுடைய அனைத்து ஓய்வுகால சேமிப்புகளும் உங்களுடைய லை.ீ.ப் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும். தனியாக ஒதுக்கி வைக்கப்படும் உங்கள் RA சேமிப்புகளில் பகுதியளவு அல்லது முழுத் தொகையும் ஆண்டுத்தொகைக்கான (ஆண்டுத்தொகை பிரீமியம் (Premium) என்றழைக்கப்படும்) பிரீமியம் செலுத்துவதற்கு பயன்படுத்தப்படும். ஆண்டுத்தொகை வழங்கீடு நீங்கள் தேர்ந்தெடுக்கின்ற லை.ீ.ப் திட்டத்தைப் பொறுத்து பல்வேறு வயதுகளில் தொடங்கும்.

பின்வரும் அட்டவணையை காணுங்கள்:

| | லை.ீ.ப் அடிப்படைத் திட்டம் | லை.ீ.ப் சமநிலைத் திட்டம் (முன்னிருப்பு திட்டம்[3]) | லை.ீ.ப் கூடுதல் அளவு திட்டம் | லை.ீ.ப் வருமானத் திட்டம் |
|---|---|---|---|---|
| **ஆண்டுத் தொகை வழங்கீடு தொடங்கும் வயது** | 90 | 80 | DDA | DDA |

**உங்களுடைய லை.ீ.ப் திட்டத்தை பொறுத்தில்லாமல், உங்கள் RA யில் மீதம் உள்ள தொகையும், ஆண்டுத்தொகையும் உங்களுக்கு மாதாந்திர வழங்கீடுகளை உங்களுடைய DDA தொடங்குவதிலிருந்து அளித்திடும்.**

வழங்கீடுகள் முதலில் உங்கள் RAயில் மீதம் உள்ள தொகையிலிருந்தும் பிறகு ஆண்டுத்தொகையிலிருந்தும் வழங்கப்படும். உங்களுடைய RA யிலிருந்து அளிக்கப்படும் வழங்கீடுகளும் ஆண்டுத்தொகையிலிருந்து அளிக்கப்படும் வழங்கீடுகளும் ஏறக்குறைய ஒரே அளவில் தான் இருக்கும்[4].

---

[2] நீங்கள் DDA க்குப் பிறகு சேர்கிறீர்கள் எனில், அதற்கடுத்த மாதத்திலிருந்து வழங்கீடுகள் தொடங்கும்.

[3] முன்னிருப்புத் திட்டம் 2013 யில் இருந்து இத்திட்டத்தின் கீழ் தானாக சேர்த்துக்கொள்ளப்படும், எந்த திட்டத்தையும் தேர்ந்தெடுக்காத உறுப்பினர்களுக்கானது.

[4] உங்கள் சொத்தை அடமானம் வைத்துவிட்டு உங்களுடைய RA சேமிப்புகளில் ஒரு பகுதியை நீங்கள் திரும்ப எடுத்துக்கொள்வது போன்ற விலக்களிப்புகள் இருக்கக்கூடும். கீழேயுள்ள “உங்கள் சொத்தை அடமானம் வைத்தல்” என்ற பிரிவைக் காண்க.

| எப்போதிலிருந்து மாதாந்திர வழங்கீடு தொடங்குகிறது: | லை∴ப் அடிப்படைத் திட்டம் | லை∴ப் சமநிலைத் திட்டம் (முன்னிருப்புத் திட்டம்) | லை∴ப் கூடுதல் அளவு திட்டம் | லை∴ப் வருமானத் திட்டம் |
|---|---|---|---|---|
| மசேநி லை∴ப் | DDA யில் இருந்து நீங்கள் உயிர் வாழும் காலம் வரையில் | | | |
| (1) ஓய்வுகாலக் கணக்கு (RA) | DDA யில் இருந்து நீங்கள் 90 வயதை அடைவதற்கு ஒரு மாதத்துக்கு முன் | DDA யில் இருந்து நீங்கள் 80 வயதை அடைவதற்கு ஒரு மாதத்துக்கு முன் | பொருந்தாது | பொருந்தாது |
| (2) ஆண்டுத் தொகை | 90 வயதிலிருந்து நீங்கள் உயிர் வாழும் காலம் வரையில் | 80 வயதிலிருந்து நீங்கள் உயிர் வாழும் காலம் வரையில் | DDA யிலிருந்து நீங்கள் உயிர் வாழும் காலம் வரையில் | DDA யிலிருந்து நீங்கள் உயிர் வாழும் காலம் வரையில் |

உங்களுடைய ஓய்வுகாலக் கணக்கிலிருந்து அளிக்கப்படும் வழங்கீடுகளும் ஆண்டுத் தொகையிலிருந்து அளிக்கப்படும் வழங்கீடுகளும் ஒரே அளவில் இருப்பதை உறுதிசெய்வதற்கு, நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள லை∴ப் திட்டத்தின் அடிப்படையில் உங்கள் ஓய்வுகாலக் கணக்கிலிருந்து கழிக்கப்பட வேண்டிய ஆண்டுத்தொகை பிரீமியத்தை வாரியம் கணக்கிடும். உங்கள் பாலினம் மற்றும் நீங்கள் சேரும் வயது ஆகியவை ஆண்டுத்தொகை பிரீமியத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும். உங்களுடைய ஓய்வுகாலக் கணக்கிலிருந்து கழித்துக்கொள்ளப்படும் ஆண்டுத்தொகை பிரீமியத்தின் சரியான தொகை குறித்து உங்களுடைய லை∴ப் திட்டம் வழங்கப்படும் வேளையில் உங்களுக்கு தெரிவிக்கப்படும்.

உதாரணம் 1: நீங்கள் 55 வயதான ஒரு ஆணாக இருந்து லை.ஃ.ப் சமநிலைத் திட்டத்தை தேர்ந்தெடுப்பவராக இருந்தால், உங்களுடைய RA சேமிப்புகளில் ஏறக்குறைய 70% தொகை உங்கள் RA யிலேயே இருக்கும். அதேவேளையில் மீதமுள்ள 30% தொகையானது ஆண்டுத் தொகையை வாங்குவதற்காக கழித்துக்கொள்ளப்படும். ஒவ்வொரு லை.ஃ.ப் திட்டங்களுக்கான தோராயமான தொகைகள்[5] கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | **லை.ஃ.ப் அடிப்படைத் திட்டம்** | **லை.ஃ.ப் சமநிலைத் திட்டம் (முன்னிருப்புத் திட்டம்)** | **லை.ஃ.ப் கூடுதல் அளவு திட்டம்** | **லை.ஃ.ப் வருமானத் திட்டம்** |
|---|---|---|---|---|
| **மீதமுள்ள RA சேமிப்புகள்** | 90% | 70% | 0% | 0% |
| **ஆண்டுத்தொகை பிரீமியம்** | 10% | 30% | 100% | 100% |

இதை கீழே காட்டப்பட்டுள்ள எழுத்து வரைவுப்படம் விளக்குகிறது:

அடிப்படை




[5] மசேநி வாரியம் உங்கள் மசேநி லை.ஃ.ப் பாலிசியை வழங்கும் வேளையில் சரியான பிரீமியத்தை உங்களுக்குத் தெரிவிக்கும்.

சமநிலை




கூடுதல் அளவு




வருமானம்



உதாரணம் 2: நீங்கள் 70 வயதான ஒரு ஆணாக இருந்து லை∴ப் சமநிலைத் திட்டத்தை தேர்ந்தெடுப்பவராக இருந்தால், உங்களுடைய RA சேமிப்புகளில் ஏறக்குறைய 55% உங்கள் RA கணக்கிலேயே இருக்கும். அதேவேளையில் மீதமுள்ள 45% தொகையானது ஆண்டுத்தொகையை வாங்குவதற்காக கழித்துக்கொள்ளப்படும். ஒவ்வொரு லை∴ப் திட்டங்களுக்கான தோராயமான தொகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | **லை∴ப் அடிப்படைத் திட்டம்** | **லை∴ப் சமநிலைத் திட்டம் (முன்னிருப்புத் திட்டம்)** | **லை∴ப் கூடுதல் அளவு திட்டம்** | **லை∴ப் வருமானத் திட்டம்** |
|---|---|---|---|---|
| **மீதமுள்ள RA சேமிப்புகள்** | 85% | 55% | 0% | 0% |
| **ஆண்டுத்தொகை பிரீமியம்** | 15% | 45% | 100% | 100% |

இதை கீழே காட்டப்பட்டுள்ள எழுத்து வரைவுப்படம் விளக்குகிறது:

அடிப்படை



<table>
<tr><td>சமநிலை</td><td>
</td></tr>
<tr><td>கூடுதல் அளவு</td><td>
</td></tr>
<tr><td>வருமானம்</td><td>
</td></tr>
</table>

எனவே, நீங்கள் லை.ஃ.ப் கூடுதல் அளவு திட்டம் அல்லது லை.ஃ.ப் வருமானத் திட்டத்தை தேர்வு செய்கிறீர்கள் என்றால், ஆண்டுத்தொகையை வாங்குவதற்காக உங்களுடைய அனைத்து RA சேமிப்புகளையும் பயன்படுத்துகிறீர்கள்.

**கே: மசேநி லைஃப்-க்காக பயன்படுத்தப்படும் என்னுடைய சேமிப்புகளுக்கு மசேநி வட்டி தொடர்ந்து வழங்கப்படுமா?**

ப: ஆம். RA சேமிப்புகளின் மீது ஈட்டப்படும் வட்டியானது RA கணக்கில் தொடர்ந்து செலுத்தப்படும். ஆண்டுத்தொகை பிரீமியத்தின் மீது ஈட்டப்படும் வட்டியானது வாழ்நாள் வருமான நிதியில் செலுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் மற்ற மசேநி லைஃப் பங்கேற்பாளர்களால் செலுத்தப்படும் ஆண்டுத்தொகை பிரீமியங்களில் இருந்து ஈட்டப்படும் வட்டியானது வாழ்நாள் முழுவதும் வழங்கீட்டை அளிப்பதற்காக ஒன்று திரட்டப்படும்.

கூடுதலாக, உங்கள் RA யில் இருந்து கழித்துக்கொள்ளப்பட்ட ஆண்டுத்தொகை பிரீமியம் (ஆண்டுத்தொகை வழங்கீடு கழித்து) உள்ளிட்ட உங்களுடைய ஒன்றுசேர்க்கப்பட்ட மசேநி மீதத் தொகைகளின்[6] முதல் $60,000 யின் மீது 1% கூடுதல் வட்டியை நீங்கள் பெறுவீர்கள். இந்த கூடுதல் வட்டியானது உங்களுடைய ஓய்வுகால கணக்கில்[7] செலுத்தப்படும்.

**கே: சேர்ந்த பிறகு என்னுடைய திட்டத்தை என்னால் மாற்றிக்கொள்ள முடியுமா?**

ப: முடியாது, நீங்கள் திட்டத்தில் சேர்ந்த பிறகு உங்கள் திட்டத்தை மாற்றிக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டீர்கள். ஒரு மசேநி லைஃப் பங்கேற்பாளர் என்ற வகையில், நீங்கள் உங்கள் திட்டத்தை மாற்றுவது என்பது அத்திட்டத்தில் ஏற்கனவே உள்ள மற்ற உறுப்பினர்களையும் பாதித்திடும்.

[6] உங்களுடைய சாதாரணக் கணக்கிலிருந்து $20,000 வரையிலான தொகையுடன்.

[7] மெடிசேவ் கணக்கில் உள்ள மீதத்தொகைகளின் மீது ஈட்டப்படும் வருமானம் தவிர, ஏனென்றால் அது மெடிசேவ் கணக்கில் வரவுவைக்கப்படும்.

**கே: சேர்ந்ததற்குப் பிறகு என்னால் விலகிக்கொள்ள முடியுமா?**

ப: முடியாது, பின்வரும் காரணங்களைத் தவிர்த்து:

அ) குறைந்த ஆயுட்காலம் கொண்டிருப்பதற்கான மருத்துவக் காரணம்;
ஆ) மீண்டும் திரும்புவதற்கான எண்ணம் இல்லாமல் சிங்கப்பூர் மற்றும் மேற்கு மலேசியாவில் இருந்து நிரந்தரமாக வெளியேறுதல்.

திருப்புத் தொகை சிறப்பியல்பு கொண்ட 3 மசேநி லை.ஃ.ப் திட்டங்களில் ஏதேனும் ஒன்றில் நீங்கள் இருந்தால், நீங்கள் மசேநி லை.ஃ.ப்-யில் சேர்வதற்கு பயன்படுத்தப்பட்ட சேமிப்புகளில் இருந்து உங்களுடைய விலகளுக்கு முன்னதாக நீங்கள் பெற்ற ஏதேனும் மாதாந்திர வழங்கீடுகள் கழித்துக்கொள்ளப்பட்டு, தள்ளுபடி செய்யப்பட்ட திருப்புத் தொகை[8] ஒன்றை நீங்கள் பெறுவீர்கள்.

எனினும், திருப்புத் தொகை சிறப்பியல்பு இல்லாத திட்டமான லை.ஃ.ப் வருமானத் திட்டத்தில் நீங்கள் இருந்தால், இத்திட்டத்திலிருந்து நீங்கள் விலகினால் எத்தகைய திருப்புத் தொகையையும் நீங்கள் பெற மாட்டீர்கள்.

**கே: என்னுடைய சொத்தை இப்போதும் என்னால் அடமானம் வைக்க முடியுமா?**

ப: ஏற்கனவே உள்ள மசேநி விதிகள் உங்கள் சொத்தை நீங்கள் அடமானம் வைப்பதற்கும் உங்கள் RA சேமிப்புகளின் ஒரு பகுதியை நீங்கள் திரும்ப எடுத்துக்கொள்வதற்கும் அனுமதிக்கின்றன. நீங்கள் லை.ஃ.ப் சமநிலைத் திட்டத்தை அல்லது லை.ஃ.ப் அடிப்படைத் திட்டத்தை தேர்ந்தெடுத்திருந்தால், சொத்தை அடமானம் வைப்பதற்கும் உங்கள் RA சேமிப்புகளின் ஒரு பகுதியை திரும்ப எடுத்துக்கொள்வதற்குமான போதிய RA சேமிப்புகளை உங்கள் கணக்கில் நீங்கள் கொண்டிருக்கக்கூடும். ஆனால் இதன் விளைவாக உங்களுடைய RA யில் இருந்து அளிக்கப்படும் மாதாந்திர வழங்கீடு குறைக்கப்படலாம்[9] மற்றும் ஆண்டுத்தொகை வழங்கீடு தொடங்கும் வயதுக்கு முன்பே உங்கள் RA வெறுமையாகிவிடலாம் என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

நீங்கள் லை.ஃ.ப் கூடுதல் திட்டத்திலோ அல்லது லை.ஃ.ப் வருமானத் திட்டத்திலோ இருக்கிறீர்கள் என்றால், உங்களுடைய அனைத்து RA சேமிப்புகளும் ஆண்டுத்தொகை பிரீமியத்திற்காக பயன்படுத்தப்படும். ஆகையால், சொத்தை நீங்கள் அடமானம் வைத்தாலும்கூட உங்களால் RA சேமிப்புகள் எதையும் திரும்ப எடுக்க இயலாது.

---

[8] மசேநி லை.ஃ.ப்-யில் சேர்வதற்கு பயன்படுத்தப்பட்ட சேமிப்புகள் முழுவதும் மாதாந்திர வழங்கீடுகளாக வழங்கப்பட்டுவிட்ட பிறகு திருப்பி கொடுக்கப்பட வேண்டிய தொகை எதுவும் இருக்காது.

[9] எனினும், ஆண்டுத்தொகை வழங்கீடு தொடங்கும் வயதிலிருந்து தொடங்கப்பெறும் உங்கள் ஆண்டுத்தொகையிலிருந்து வழங்கப்படும் மாதாந்திர வழங்கீடானது பாதிக்கப்படாது.

## 2.2 என்னுடைய குறைந்தபட்ச தொகையை மீட்கத் தொடங்கும் வயதை (DDA)[10] நான் அடையும் போது

### கே: என்னுடைய DDA க்கு 1-2 மாதங்களுக்கு முன்னர் என்ன நடக்கும்?

ப: நீங்கள் மசேநி லை.்.ப்-யில் சேரும் காலம் முதல் நீங்கள் குறைந்தபட்ச தொகையை மீட்கத் தொடங்கும் வயதை (DDA) அடையும் வரையில், உங்களுடைய ஒன்றிணைக்கப்பட்ட மசேநி மீதத் தொகைகளின்[11] (நீங்கள் மசேநி லை.்.ப்-யில் சேரும் வேளையில் ஆண்டுத்தொகை பிரீமியமாக கழித்துக்கொள்ளப்படும் சேமிப்புகள் உள்பட) முதல் $60,000 மீது ஈட்டப்படும் கூடுதல் 1% வட்டியானது உங்களுடைய ஓய்வுகால கணக்கில் (RA) வரவு வைக்கப்படும். கூடுதல் செலுத்துத் தொகைகளில் இருந்து அல்லது உங்கள் சொத்து விற்பனை மூலம் திரும்பப் பெறும் தொகைகளில் இருந்து பெறப்படும் கூடுதல் தொகைகள் கூட உங்கள் ஓய்வுகாலக் கணக்கில் வரவு வைக்கப்படலாம்.

உங்களுடைய DDA க்கு சுமார் 1-2 மாதங்களுக்கு முன்னர், நீங்கள் தேர்ந்தெடுத்த லை.்.ப் திட்டத்திற்காக [12] மற்றொரு ஆண்டுத்தொகை பிரீமியத்தை மசேநி வாரியம் இத்தகைய கூடுதல் பணத்திலிருந்து கழித்துக்கொள்ளும்.

இது தன்னியக்கமாகவே செய்யப்படும், மற்றும் உங்கள் DDA விலிருந்து நீங்கள் பெறும் மாதாந்திர வழங்கீட்டின் சரியான தொகையின் அளவு உங்களுக்கு அப்போது தெரிவிக்கப்படும்.

### கே: என்னுடைய DDA விலிருந்து என்ன நடக்கும்?

ப: நீங்கள் தேர்ந்தெடுத்த லை.்.ப் திட்டத்தின் அடிப்படையில் நீங்கள் வாழும் காலம் வரையில் உங்கள் RA மற்றும்/அல்லது ஆண்டுத்தொகையில் இருந்து மாதாந்திர வழங்கீட்டை நீங்கள் பெறத் துவங்குவீர்கள். உங்களுடைய மாதாந்திர வழங்கீடுகள் இன்டர்-பேங்க் GIRO (IBG) வாயிலாக ஒவ்வொரு மாதமும்[13] 7ஆவது வேலை நாளில் உங்கள் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுவிடும்.

---

[10] உங்களுடைய DDA க்கு முன்னதாக நீங்கள் இத்திட்டத்தில் சேர்ந்தால் மட்டுமே இந்தப் பிரிவு பொருந்தும்.

[11] $20,000 வரையிலான தொகை உங்களுடைய சாதாரணக் கணக்கு (OA) சேமிப்புகளில் இருந்து பெறப்படும்.

[12] உங்களுடைய ஆரம்ப RA சேமிப்புகள் பிரிக்கப்பட்ட முறையைப் போன்றே இத்தகைய கூடுதல் தொகைகளும் பிரிக்கப்படும். இந்த தொகையானது DDA க்கு முன்னர் உங்கள் RA யில் புதிதாக சேர்ந்த ஏதேனும் தொகையையும் உள்ளிடும்.

[13] IBG வாயிலாக வரவு வைக்கப்பட முடியவில்லை என்றாலோ அல்லது நீங்கள் வங்கிக் கணக்கு குறித்த விவரங்களை அளிக்கவில்லை என்றாலோ, வழங்கீடுகள் உங்களுடைய மசேநி சாதாரணக் கணக்கில் வரவு வைக்கப்படும். நடப்பிலுள்ள மசேநி தொகை திரும்பப் பெறுதல் விதிகளின்படி அதிலிருந்து நீங்கள் தொகையை திரும்ப எடுத்துக்கொள்ளலாம்.

உங்களுடைய DDA க்குப் பிறகு உங்கள் RA கணக்கில் வரவுவைக்கப்படும் 1% கூடுதல் வட்டியானது அது ஈட்டப்படும் வரையில் உங்களுடைய மசேநி மாதாந்திர வழங்கீட்டின் ஒரு பகுதியாக உங்களுக்கு வழங்கப்படும். உங்கள் RA யில் இருந்து கழித்துக்கொள்ளப்பட்ட ஆண்டுத்தொகை பிரீமியம் (ஆண்டுத்தொகை வழங்கீடு கழித்து) உள்ளிட்ட உங்களுடைய ஒன்றுசேர்க்கப்பட்ட மசேநி மீதத் தொகைகள் (ஆண்டுத்தொகை பிரீமியமாக கழித்துக்கொள்ளப்படும் சேமிப்புகள் உட்பட) $60,000 க்கு கீழ் சென்றால் ஈட்டப்படும் 1% கூடுதல் வட்டியிலிருந்து வழங்கப்படும் வழங்கீட்டுத் தொகையும் அதற்கேற்றவாறு குறைந்திடும்.

**கே: மாதாந்திர வழங்கீடு நிலையானதா?**

**ப:** இல்லை, மசேநி வட்டி விகிதங்கள் மற்றும் இறப்புவீதம் போன்ற காரணிகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு ஒவ்வொரு வருடமும் மாதாந்திர வழங்கீடு. சரிசெய்யப்படலாம் வழக்கமாக சரிசெய்தல்கள் சிறிய அளிவிலேயே செய்யப்படும் என்பதால் வழங்கீடுகள் நிலையாகவே இருக்கும்.

அவ்வாறு சரி செய்யப்பட்டால் உங்களுக்கு 2 அல்லது 3 மாதங்களுக்கு முன்னதாகவே தெரிவிக்கப்படும்.

**கே: என்னுடைய DDA க்குப் பிறகு நான் என்னுடைய** ஓய்வுக் கணக்கு **(RA) யில் கூடுதல் தொகைகளைப் பெற்றால் என்ன நடக்கும்?**

**ப:** உங்களுடைய DDA க்குப் பிறகு உங்கள் RA யில் நீங்கள் கூடுதல் தொகைகளை பெற்றால் (உதாரணத்திற்கு கூடுதல் செலுத்துத் தொகைகள் அல்லது சொத்து திருப்புத்தொகையில் இருந்து), அவை உங்களுடைய RA மாதாந்திர வழங்கீடுகளின் பகுதியாக வழங்கப்படும். இது உங்கள் RA யில் இருந்து அளிக்கப்படும் உங்களுக்கான மாதாந்திர வழங்கீடுகளுக்கும் உங்கள் ஆண்டுத் தொகையில் இருந்து அளிக்கப்படும் மாதாந்திர வழங்கீடுகளுக்கும் இடையே வேறுபாட்டை விளைவித்திடலாம்.

உங்களுடைய RA மற்றும் ஆண்டுத் தொகையிலிருந்து கிடைக்கப்பெறும் மாதாந்திர வழங்கீடுகள் ஒரே அளவில் இருப்பதற்கு நீங்கள் மற்றொரு ஆண்டுத் தொகையையும் வாங்க விரும்பினால், அதற்கு நீங்கள் மசேநி வாரியத்திடம் தெரிவிக்க வேண்டியதிருக்கும். அப்போதுதான் நீங்கள் பூர்த்தி செய்வதர்காக விண்ணப்ப படிவம் – LID-APP(1A) மசேநி லைஃப்க்கான கூடுதல் ஆண்டுத்தொகை விண்ணப்ப படிவம் ஒன்றை நாங்கள் உங்களுக்கு அனுப்பி வைப்போம். மாறாக www.cpf.gov.sg எனும் எங்கள் இணையத்தளத்தின் வழியாக விண்ணப்ப படிவம் ஒன்றை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த படிவத்தை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

## 2.3 நான் இறந்துவிட்டால்

**கே: இறப்பைத் தொடர்ந்து என்ன நடக்கும்?**

ப: இறப்பைப்[14] தொடர்ந்து மசேநி லைஃப் வழங்கீடு வழங்கப்படுவது நிறுத்தப்படும்.

லைஃப் அடிப்படை, லைஃப் சமநிலை மற்றும் லைஃப் கூடுதல் அளவுத் திட்டங்கள் ஆகிய இம்மூன்று லைஃப் திட்டங்களில் ஏதேனும் ஒன்றில் நீங்கள் இருக்கிறீர்கள் எனில், உங்கள் வாரிசுதாரர்கள் வாரிசுத் தொகையை பெறக்கூடும்.

எனினும், நீங்கள் லைஃப் வருமானத் திட்டத்தில் இருக்கிறீர்கள் எனில், உங்கள் வாரிசுதாரர்கள் எத்தகைய வாரிசுத் தொகையையும் பெற மாட்டார்கள்.

**கே: வாரிசுத்தொகை என்றால் என்ன?**

ப: இறப்பைத் தொடர்ந்து பயன்படுத்தப்படாத ஆண்டுத்தொகை பிரீமியத்தை[15] லைஃப் அடிப்படை, லைஃப் சமநிலை மற்றும் லைஃப் கூடுதல் அளவுத் திட்டங்கள் திரும்ப அளிக்கின்றன. இந்தத் திட்டங்களின் கீழ், உங்கள் ஆண்டுத் தொகையிலிருந்து எத்தகைய வழங்கீடும் அளிக்கப்படுவதற்கு முன்னர் நீங்கள் இறந்துவிட்டால், முழு பிரீமியமும் திரும்ப அளிக்கப்படும். மாதாந்திர ஆண்டுத்தொகை வழங்கீடு தொடங்கிய பிறகு நீங்கள் இறந்துவிட்டால், பயன்படுத்தப்படாத பிரீமியம் திரும்ப அளிக்கப்படும். திரும்ப அளிக்கப்படும் இத்தொகையே வாரிசுத்தொகை என்று அழைக்கப்படுகிறது.

உங்களுடைய மசேநி கணக்குக்கு திரும்ப அளிக்கப்படும் ஏதேனும் பயன்படுத்தப்படாத பிரீமியம் தொகையுடன் உங்களுடைய மசேநி சேமிப்புகளின் மீதத் தொகையும் சேர்த்து உங்களுடைய வாரிசுதாரர்களுக்கு அளிக்கப்படும். உங்களுக்கு வாரிசுதாரர் யாருமில்லை என்றால், உங்களுடைய சேமிப்புகள் வாரிசுரிமை சட்டங்களுக்கு இணங்கி பகிர்ந்தளிப்பதற்காக பொது அறக்காப்பாளரிடம் அளிக்கப்படும்.

எந்த வழங்கீடும் அளிக்கப்படுவதற்கு முன்பே உறுப்பினர் ஒருவர் இறக்க நேர்ந்தாலும் கூட ஆண்டுத்தொகை பிரீமியத்தில் எதையும் திரும்ப **அளித்திடாத** ஒரே திட்டம் லைஃப் வருமானத் திட்டம் தான்.

---

[14] நீங்கள் இன்னமும் உயிருடன் தான் இருக்கிறீர்கள் என்பதை நிரூபணம் செய்வதற்கு போதுமான சான்றுகளை நீங்கள் அவ்வப்போது அளிக்க வேண்டியிருக்கும். உங்களுக்கு அளிக்கப்படும் குறிப்பிட்ட காலத்திற்குள் நீங்கள் அவ்வாறு செய்யவில்லை என்றால், மாதாந்திர வழங்கீடு நிறுத்தப்பட்டுவிடும். நீங்கள் உயிருடன் இருக்கிறீர்கள் என்பதற்கான சான்றை அளிப்பதன் பேரில் வழங்கிட்டுத்தொகை வழங்கப்படுவது மீண்டும் தொடரும்.

[15] பயன்படுத்தப்படாத ஆண்டுத்தொகை பிரீமியம் என்பது ஆண்டுத்தொகையிலிருந்து நீங்கள் பெற்ற மாதாந்திர வழங்கீடுகளில் கழித்துக்கொண்டு செலுத்தப்பட்ட ஆண்டுத்தொகை பிரீமியமேயாகும்.

| | லைஃப் அடிப்படைத் திட்டம் | லைஃப் சமநிலைத் திட்டம் (முன்னிருப்புத் திட்டம்) | லைஃப் கூடுதல் அளவு திட்டம் | லைஃப் வருமானத் திட்டம் |
|---|---|---|---|---|
| **இத்திட்டங்களின் கீழ் வாரிசுத் தொகை எவ்வாறு ஒப்பிடப்படுகிறது?** | அதிகம் | நடுத்தரம் | குறைவு | வாரிசுத்தொகை இல்லை[16] |
| **நான் இறக்கும் போது என்னுடைய வாரிசுகளுக்கு நான் எவ்வளவு வாரிசுத்தொகையை விட்டுச்செல்வேன்?** | வாரிசுத்தொகை = உங்கள் RA யில் உள்ள மீதித்தொகைகள், ஏதேனும் இருந்தால் + பயன்படுத்தப்படாத ஆண்டுத்தொகை பிரீமியம். | | வாரிசுத்தொகை = பயன்படுத்தப்படாத ஆண்டுத்தொகை பிரீமியம். | வாரிசுத்தொகை இல்லை. ஏனெனில் நான்கு திட்டங்களுக்கு மத்தியில் இது அதிக வழங்கீட்டை அளிக்கிறது. |

16 வாரிசுத்தொகை இல்லை என்றால் பங்கேற்பாளரின் இறப்புக்குப் பின் மாத வழங்கீடு தொடங்க பெரவில்லை என்றாலும்கூட **திருப்புத்தொகை எதுவும் வழங்கப்படாது**

## உங்களுக்கு ஏற்படக்கூடிய பிற கேள்விகள்

**கே: அதிக வழங்கீடுகளை நான் எவ்வாறு பெற முடியும்?**

ப: உங்களுடைய ஓய்வுகாலத்தில் அதிக வழங்கீட்டை பெற நீங்கள் விரும்பினால், நடப்பிலுள்ள குறைந்தபட்ச தொகை (MS) வரையில் உங்களுடைய RA யில் நீங்கள் ரொக்கம் மற்றும்/அல்லது மசேநி கூடுதல் செலுத்துத் தொகைகளை நீங்கள் செலுத்தலாம்.

உங்களுடைய RA யில் கூடுதல் செலுத்துத் தொகைகளை செலுத்துவது குறித்த கூடுதல் தகவல்களுக்கு www.cpf.gov.sg ஐ பார்க்கவும்.

**கே: $20,000 க்கும் குறைவான தொகையுடன் நான் மசேநி லை∴ப்- யில் சேர்கிறேன் என்றால், முழு எல்-போனஸை பெறுவதற்காக $20,000 வரையிலான கூடுதல் செலுத்துத் தொகைகளை என்னால் பிறகு செலுத்த முடியுமா?**

ப: முடியும், ஆனால் நீங்கள் உங்கள் RA யில் கூடுதல் செலுத்துத் தொகையை செலுத்த வேண்டும் மற்றும் உங்களுக்கு பொருந்தக்கூடிய எல்-போனஸ் தகுதிக் காலத்திற்குள் மசேநி லை∴ப்-க்கான தொகையை உறுதிபடுத்த வேண்டும்:

| யார் | எப்போது |
|---|---|
| நீங்கள் 1955 க்கு முன்னதாக பிறந்திருந்தால் | 31 டிசம்பர் 2010 க்கு முன்னர் |
| நீங்கள் 1955 யில் இருந்து 1962 ஆம் ஆண்டுகளில் பிறந்திருந்தால் | 56 வயதை அடைவதற்கு முன்னர் |

நீங்கள் பெற இருக்கும் முழு எல்-போனஸை தீர்மானிப்பதற்கு நீங்கள் மசேநி லை∴பில் முதலில் இணையும் போது இருக்கும் AV & AI பயன்படுத்தப்படும்.

**கே: நான் பெறும் லைஃப்-போனஸ் (எல்-போனஸ்) தொகையில் எனக்கு ஒப்புதல் இல்லை என்றால் நான் என்ன செய்ய வேண்டும்?**

ப: இது குறித்து நீங்கள் விரைவாக மசேநி வாரியத்திடம் தெரிவிப்பதன் மூலம் அது ஆராயப்பட்டு தேவையெனில் சரிசெய்யப்படும்.

நீங்கள் பெற்றுக்கொண்ட தொகையைக் காட்டிலும் எல்-போனஸ் தொகை அதிகமாக இருந்தால், வித்தியாசத் தொகையானது உங்கள் RA யில் வரவு வைக்கப்படும்.

மாற்றாக, நீங்கள் பெற்றுக்கொண்ட தொகையைக் காட்டிலும் எல்-போனஸ் தொகை குறைவாக இருந்தால், வித்தியாசத் தொகையானது அரசாங்கத்திடம் திரும்ப அளிக்கப்படும்.

## பின்னிணைப்பு: மசேநி லைஃப்-யில் பயன்படுத்தப்படும் சொற்களின் அர்த்தம்

<table>
<tr><td>வாரிசுத் தொகை</td><td>இது இறப்புக்குப் பிறகு நீங்கள் உங்கள் வாரிசுகளுக்கு விட்டுச் செல்லும் தொகையாகும். நீங்கள் மசேநி லைஃப்-யில் சேர்வதற்கு பயன்படுத்தப்பட்ட உங்கள் சேமிப்புத் தொகைகளில் இருந்து நீங்கள் ஏற்கனவே பெற்றுக்கொண்ட மாதாந்திர வழங்கீடுகள் கழிக்கப்பட்டு மீதமுள்ள தொகைகளை இது உள்ளடக்கியிருக்கும்.</td></tr>
<tr><td>வாரிசுதாரர்கள்</td><td>உங்கள் இறப்புக்குப் பிறகு உங்கள் மசேநி சேமிப்புகளைப் பெறுவதற்கு உங்களால் நியமிக்கப்படுகின்ற நபர்கள் அல்லது நீங்கள் மசேநி நியமனத்தை செய்திருக்கவில்லை எனில் வாரிசுரிமை சட்டங்களுடன் இணங்கிய உங்கள் இரத்த உறவினர்கள்.</td></tr>
<tr><td>குறைந்தபட்சத் தொகையை மீட்கத் தொடங்கும் வயது (DDA)</td><td>உங்களுடைய ஓய்வுக் கணக்கிலிருந்து உங்கள் மாதாந்திர வழங்கீடுகளை பெறத் தொடங்கும் வயது.
<table>
<tr><th>நீங்கள் இந்த வருடத்தில் பிறந்திருந்தால்</th><th>1943 அல்லது அதற்கு முன்னர்</th><th>1944 - 1949</th><th>1950 – 1951</th><th>1952- 1953</th><th>1954 அல்லது அதற்கு பின்னர்</th></tr>
<tr><td>DDA</td><td>60</td><td>62</td><td>63</td><td>64</td><td>65</td></tr>
</table>
</td></tr>
<tr><td>கூடுதல் வட்டி (EI)</td><td>உங்களுடைய ஒன்றிணைக்கப்பட்ட மசேநி தொகைகளுடன் (மசேநி லைஃப்-யில் சேர்வதற்கு பயன்படுத்தப்படும் சேமிப்புகள் உள்ளிட்டவை) உங்களுடைய சாதாரணக் கணக்கிலிருக்கும் (OA) $20,000 வரையிலான தொகையும் சேர்ந்த முதல் $60,000 தொகையானது 1% கூடுதல் வட்டியை ஈட்டுகிறது. ஈட்டப்படும் கூடுதல் வட்டி உங்களுடைய ஓய்வுக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது (உங்களுடைய மெடிசேவ் கணக்கில் உள்ள தொகையின் மீது ஈட்டப்படும் வருமானம் தவிர, ஏனென்றால் அது மெடிசேவ் கணக்கில் வரவுவைக்கப்படும்).</td></tr>
</table>

| | |
|---|---|
| குறைந்தபட்சத் தொகை (MS) | ஓய்வுகாலத் தேவைகளுக்காக உங்களுடைய 55ஆவது வயதில் உங்கள் ஓய்வுக் கணக்கில் (RA) நீங்கள் ஒதுக்கி வைப்பதற்கு தேவைப்படும் தொகை. இதை ரொக்கமாகவோ, அல்லது பகுதி ரொக்கமாகவோ மற்றும் பகுதி சொத்து அடமானமாகவோ செலுத்தலாம், குறைந்தபட்ச தொகையில் 50% வரையில் சொத்து அடமானமாக வைத்திடலாம். |
| சொத்து அடமானம் | உங்களுடைய குறைந்தபட்சத் தொகைக்கு பதிலாக உங்கள் சொத்துக்கு ஈடாக நிறுத்திவைக்கப்படும் தொகை. சொத்து அடமானம் குறித்த தகவல்களை அறிந்திட தயவுசெய்து வாரியத்தின் வலைதளத்தை காணுங்கள். |
| ஓய்வுக் கணக்கு (RA) | வயதான காலத்தில் உங்களுக்கு தேவைப்படுகின்ற ஓய்வுகால வருமானத்தை ஈடுசெய்வதற்கு நீங்கள் 55ஆவது வயதை அடையும் போது அமைத்துக் கொடுக்கப்படும் ஒரு கணக்கு. இது ஒரு தனிநபர் சேமிப்புக் கணக்காகும். |
| இறப்பு வீதம் | பல்வேறு வயதில் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள மரணம். ஆதிக நபர்கள் நீண்ட காலம் வாழ்ந்தால், உங்களுடைய மாதாந்திர வழங்கீடு குறையக்கூடும், அதேபோன்று குறைவான காலம் வாழ்ந்தால் வழங்கீடு அதிகரிக்கக்கூடும். |

**மேல் விவரங்களுக்கு, தயவுசெய்து www.cpf.gov.sg ஐ பார்வையிடுங்கள்**
**மின்னஞ்சல் : cpf-life@cpf.gov.sg**
**மசேநி தெடர்பு நிலையத்தை அழையுங்கள் : 1800-227-1188 (உள்ளூர்)**
**65-6227-1188 (வெளியூர்)**

<u>குறிப்பு:</u>

இந்தச் சிறு புத்தகம் உங்களுடைய குறிப்புக்கானது மற்றும் இதன் உள்ளடக்கங்க ள் மற்றும் தகவல்கள் **மார்ச்** 2010 வரையில் சரியானவையாகும். மசேநி லை.்.ப் திட்டம் என்பது மத்திய சேமநிதி சட்டம் (அதிகாரம் 36) மற்றும் அதன்கீழ் துணையாக பயன்படுவதற்கு இயற்றப்படும் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களோடு வாரியத்தால் நேரத்திற்கு நேரம் விதிக்கப்படும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் முன்னேற்பாடுகளுக்கு உட்பட்ட திட்டமாகும்.